புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 163 | 18-12-2025 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volume 01 | Issue: 163 | 18-12-2025 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## எத்தியோப்பியாவின் கவுரவ விருதை 140 கோடி இந்தியர்களுக்கும் அர்ப்பணிக்கிறேன் : பிரதமர் மோடி ,,




"அடிஸ் அபாபா, டிச. 18–

பிரதமர் மோடியின் 3 நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக அவர் எத்தியோப்பியாவுக்கு புறப்பட்டு சென்றார். எத்தியோப்பியாவில் பிரதமர் மோடி 2 நாள் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார். இதன்படி அந்நாட்டுக்கு சென்ற அவரை அந்நாட்டின் பிரதமர் அபி அகமது அலி விமான நிலையத்தில் வரவேற்றார். பின்னர் அவரை தன்னுடன் காரில் அழைத்து சென்றார். எத்தியோப்பிய பிரதமர் அபி அகமதுவுடனான சந்திப்பின்போது பேசிய பிரதமர் மோடி, "ஆயிரம் ஆண்டுகளாக இரு நாடுகளும், தகவல் தொடர்பு, பரிமாற்றம் உள்ளிட்டவற்றில் ஈடுபட்டு வந்துள்ளன. நம்முடைய இரு நாடுகளின் ஒத்துழைப்பில், பொருளாதாரம், புதிய கண்டுபிடிப்பு, தொழில் நுட்பம், பாதுகாப்பு, சுகாதாரம், திறன் கட்டமைப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பு போன்றவற்றின் முக்கிய அம்சங்களில் விரிவாக கலந்து ஆலோசனை மேற்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை இன்று நாம் பெற்றுள்ளோம். இந்தியாவில், எத்தியோப்பிய மாணவர்களுக்கான உதவி தொகையை இரட்டிப்பாக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்" என்று கூறினார். தொடர்ந்து அவர் பேசும்போது, பன்முக தன்மையில் ஒற்றுமைக்கான அடையாளங்களாக, மொழிவளம் மற்றும் பாரம்பரியங்களை கொண்ட இரு நாடுகளும் உள்ளன. அமைதி மற்றும் மனித இன நலனுக்கான செயல்பாட்டில் ஈடுபடும் ஜனநாயக சக்திகளாக இந்தியாவும் எத்தியோப்பியாவும் உள்ளன" என்று பிரதமர் மோடி கூறினார். இதனைத்தொடர்ந்து பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. அந்நாட்டின், "தி கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா" என்ற உயரிய விருது அவருக்கு அளிக்கப்பட்டது. பிரதமருக்கு, எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது இந்த விருதுவழங்கி கவுரவித்தார். இந்த விருது பெறும் முதல் உலக தலைவர் என்ற பெருமையை பிரதமர் மோடி பெற்றுள்ளார். பிரதமர் மோடிக்கு வெளிநாடுகளில் கிடைக்க பெற்ற 28வது உயரிய விருது இதுவாகும். இந்நிலையில் எத்தி யோப்பியா நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இந்த மாபெரும் கட்டிடத்தில்தான் உங்கள் சட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன, இங்கே மக்களின் விருப்பம் அரசின் விருப்பமாக மாறுகிறது. மேலும், அரசின் விருப்பம் மக்களின் விருப்பத்துடன் இணக்கமாக இருக்கும் போது, திட்டங்கள் முன்னோக்கி செல்கிறது. உங்கள் மூலமாக, நான் வயல்களில் உள்ள உங்கள் விவசாயிகளிடமும், புதிய யோசனைகளை உருவாக்கும் தொழில்முனைவோரிடமும், சமூகங்களை வழிநடத்தும் பெண்களிடமும், எதிர்காலத்தை வடிவமைக்கும் எத்தியோப்பிய இளைஞர்களிடமும் பேசுகிறேன். நேற்று, 'எத்தியோப்பியாவின் மாபெரும் கவுரவ விருதை' பெறுவதில் நானும் பெருமை அடைந்தேன். இதனை 140 கோடி இந்தியர்களுக்கும் அர்ப்பணிக்கிறேன். இந்த விருதை இந்திய மக்கள் சார்பாக, பணிவுடனும் கைகூப்பிய கரங்களுடனும் நான் ஏற்றுக்கொள்கிறேன்!" என்று கூறினார். ",

## தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளை பாதுகாப்பாக நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு!!

சென்னை : டிச. 18–

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளை பாதுகாப்பாக நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. பொங்கல் மற்றும் தமிழர் திருவிழாவை முன்னிட்டு கால்நடை பராமரிப்புத் துறை செயலர் சுப்பையன் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார். அதில் இடம்பெற்றுள்ளவை பின்வருமாறு...

*மாவட்ட ஆட்சியர்களிடம் முன்கூட்டியே அனுமதி பெறாமல் ஜல்லிக்கட்டு உள்பட எந்த போட்டிகளையும் நடத்தக் கூடாது.

*விலங்கு வதை தடுப்புச் சட்ட விதிகளுக்கு இணங்க போட்டிகளை நடத்த அனுமதி வழங்க வேண்டும்.

*முன்கூட்டியே அறிவிப்பு வெளியிடாமல் எந்த போட்டியும் நடத்த ஒப்புதல் அளிக்கக் கூடாது.

*விலங்கு வதை தடுப்பு சட்டத்தின் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி காளைகள் மற்றும் கால்நடைகளுக்கு எந்த விதமான தீங்கும் ஏற்படாத வகையில் ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும்.

*காளைகள் துன்புறுத்தப்படாமல் இருப்பதையும், பாதுகாப்பாக இருப்பதையும் உறுதி செய்வது அவசியம்.

*ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதற்காக அதில் தொடர்புடைய துறைகள் அனைத்திலும் அதிகாரப்பூர்வ குழுக்கள் முன்கூட்டியே அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

*இந்த போட்டிகளில் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் அதுதொடர்பான விழிப்புணர்வையும், புரிதலையும் ஏற்படுத்துவது முக்கியம்.

*போட்டி நடைபெறுவதற்கு முன்னதாகவே அனைத்து ஏற்பாடுகளையும் முழுமையாக செய்திருக்க வேண்டும். ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழியில் மட்டுமே அனுப்ப வேண்டும்.

* விண்ணப்பிக்கும்போதே காப்பீட்டு ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்துவது அவசியம்.

*ஜல்லிக்கட்டுக்கு தொடர்பு இல்லாத இடங்களில் அத்தகைய போட்டிகள் நடத்தக் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

*தேவையற்ற குழப்பங்கள், தவறுகளைத் தவிர்க்கவும், ஒழுங்குமுறையுடன் போட்டிகளை நடத்தவும், விதிகளை சரிபார்க்கும் பட்டியலின்படி (செக் லிஸ்ட்) செயல்படுதல் வேண்டும்.

*போட்டி களத்திலிருந்து காளைகள் வெளியேறும் இடத்தில் கால்நடை மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருத்தல் அவசியம்.

*தேவைப்படும் காளைகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சைகளை அவர்கள் வழங்க வேண்டும்.

*அதேபோன்று, போட்டி களத்துக்குள் பார்வையாளர்களும், வெளி நபர்களும், வீரர்கள் அல்லாத பிறரும் இருக்க அனுமதியில்லை. அதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு காவல் துறைக்கு உள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டு இருப்பாரா?

### ஊரக வேலை விவகாரத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி




சென்னை: டிச. 18–

"ஊரக வேலை திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில், நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அதிமுக எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்கிறதா? உங்கள் தலைவி ஜெயலலிதா இதற்கு ஒப்புக் கொண்டிருப்பாரா?" என முதல்வர் ஸ்டாலின் எடப்பாடி பழனிசாமிக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பச்சைத்துண்டு போட்டுக்கொண்டு பச்சைத் துரோகம் செய்பவருக்கு, மீண்டும் விவசாயிகள் கண்ணில் தெரியவில்லையா? கிராமப்புற ஏழை மக்களின் வயிற்றிலேயே அடிக்கும் விபி ஜி ஆர்ஏஎம்ஜி (VBGRAMG) குறித்து எதிர்க்கட்சி அதிமுகவின் நிலைப்பாடு என்ன? மூன்று வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்தச் சட்டம் போல இதிலும் அமித் ஷாவுக்கு ஆமாம் சாமி போட்டு ஆதரவு தரப்போகிறாரா திருவாளர் பழனிசாமி?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதம் (MGNREGA) திட்டத்தில் உள்ள காந்தியடிகளின் பெயரை அகற்றிவிட்டு, சொன்னால் வாய் சுளுக்கிக் கொள்ளும்படி இந்தியில் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்து வென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கட்சியின் பெயரில் வைத்துக் கொண்டு, இதை எதிர்க்கக் கூடவா தயக்கம்?

திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அதிமுக எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்கிறதா? உங்கள் தலைவி ஜெயலலிதா இதற்கு ஒப்புக் கொண்டிருப்பாரா?


வறுமையை ஒழித்த சாதனைக்குத் தண்டனையாக தமிழ்நாட்டில் நூறு நாள் வேலைத்திட்டமே நின்றுபோகும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளோம். இதற்கு, எப்படி முட்டு கொடுக்கப் போகிறார் எதிர்க்கட்சித் தலைவர்? இவ்வளவு குனிந்து கும்பிடும் போடும் உங்களது கட்சிக்கு, "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயர் எதற்கு? நான் கேட்கவில்லை; தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சேலம் அரசு பெண்கள் கலை கல்லூரியில் மகளிர் சுய உதவிக்குழு சிறுதானிய உணவகத்தினை அமைச்சர் இரா.இராஜேந்திரன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி துணை மேயர் சாராதாதேவி, திட்ட இயக்குனர் வாணி ஈஸ்வரி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## ஈரோட்டில் இன்று விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி...

### காவல்துறையின் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு இடையே ஏற்பாடுகள் தீவிரம்...






ஈரோடு. டிச. 18

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள விஜயமங்கலம் பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி இன்று. நடைபெறுகிறது. காவல்துறையின் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

திரைப்பட நடிகர் விஜய் தமிழக வெற்றி கழகம் என்ற அரசியல் கட்சியை, வரும் 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற பொது தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தில், தமிழ்நாடு முழுவதும் மக்கள் சந்திப்பு என்ற பெயரில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறார்.

அவர் மாநாடு பொதுக்கூட்டம் என்று நடத்திய நிலையில், அவர் கலந்து கொண்ட கரூர் வேலுசாமிபுரம் மக்கள் சந்திப்பு பிரச்சாரக் கூட்டத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தால் கடுமையாக அப்சட்டான விஜய் சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக எந்த ஒரு கட்சி மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்தார்.

75 நாட்களுக்குப் பிறகு கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தொடங்கிய அவர் இம்மாதம் டிசம்பர் 9 ஆம் தேதி புதுச்சேரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

இதற்கிடையே அதிமுக முன்னாள் அமைச்சர் கே எ செங்கோட்டையன் விஜய் முன்னிலையில் தமிழக வெற்றி களத்தில் இணைந்தார். அவருக்கு கட்சியில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜயை அழைத்து வந்து ஒரு பிரமாண்ட பொதுக்கூட்டத் திற்கு ஏற்பாடு செய்தார்.

அதன்படி அந்த மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டம் என்பது இன்றே டிசம்பர் 18ஆம் தேதி ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள விஜயமங்கலம் டோல்கேட் அடுத்துள்ள சரளை என்ற இடத்தில் இன்று நடை பெறுகிறது.

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட பின் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்த செங்கோட்டையன் தனது சொந்த மாவட்டத்தில் தன்னுடைய பலத்தை மற்றும் தன்னுடைய செல்வாக்கை நிருபித்துக் காட்டும் வகையில் இன்றைய விஜயின் மக்கள் சந்திப்பு பொதுக்கூட்ட நிகழ்ச்சி சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஈரோடு மாவட்ட நிர்வாகமும், வட்ட காவல் துறையும் இன்று நடைபெறும் விஜயின் மக்கள் சந்திப்பு பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு 18 நிபந்தனைகளை விதித்துள்ளது. காவல்துறையின் நிபதனைகள் மீறப்பட்டு, ஏதாவது அசம்பாவிதங்கள் நடைபெறும் சூழல் ஏற்பட்டால் அதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டளர்களே முழு பொறுப்பு என்று காவல்துறை தனவே நிபந்தனைகளில் முக்கியமான நிபந்தனையாக இதை தெரிவித்துள்ளது.

மேலும் கூட்டத்திற்கு சுமார் 2000 பெண்கள் கலந்து கொள்வார்கள் என்ற நிலையில் அவர்களுக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டத்திற்கு கலந்து கொள்ளும் பொது மக்களுக்கு குடிநீர், கழிவறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

சந்திப்பு கூட்டம் நடைபெறும் இடத்தில் தடுப்புகள் அமைக்கப்பட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள கோபுரங்கள் மற்றும் கம்பங்களில் சுருள் கம்பி சுற்றுள்ளது. மேலும் மருத்துவத் தேவைக்காக 72 மருத்துவர்கள் மற்றும் 120 செவிலியர்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் உள்ளிட்ட மருத்துவ குழுவும் கூட்டம் நடைபெறும் இடத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அதோடு சுமார் 200க்கும் மேற்பட்ட பவுன்சர்களின் பாதுகாப்பும் கட்சி சார்பில் தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஈரோட்டில் நடைபெறும் தமிழக வெற்றி கழக தலைவர் விஜயின் மக்கள் சந்திப்பு கூட்டத்தில் அவர் என்ன பேசப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# புதுச்சேரியில் கொட்டும் மழையில் முருக பக்தர்கள் ஆவேசப் போராட்டம்

## காங்கிரஸ் எம்.பி. வைத்தியலிங்கத்திற்கு கடும் கண்டனம்!



புதுச்சேரி: டிச.18–

திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக முருக பக்தர்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியதாகக் கூறி, புதுச்சேரி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியலிங்கத்தை கண்டித்து, முருக பக்தர்கள் இன்று கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிண்ணனி:

திருப்பரங்குன்றம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக முதன்முதலில் கையெழுத்திட்டு எதிர்ப்பை பதிவு செய்த முருக பக்தர்களை, புதுச்சேரி எம்.பி. வைத்தியலிங்கம் இழிவுபடுத்தும் வகையில் விமர்சித்ததாகக் கூறப்படுகிறது. ஆன்மீக உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலான அவரது இந்தச் செயலைக் கண்டித்து பக்தர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

போராட்ட விவரம்:

புதுச்சேரியில் இன்று காலை முதலே கனமழை பெய்து வருகிறது. இருப்பினும், மழையையும் பொருட்படுத்தாத நூற்றுக்கணக்கான முருக பக்தர்கள், சாலைகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். குடைகளைப் பிடித்த படியும், மழையில் நனைந்தபடியும் நின்ற பக்தர்கள், எம்.பி. வைத்தியலிங்கத்திற்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

பக்தர்களின் நம்பிக்கையை கொச்சைப் படுத்தும் வகையில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் உடனடியாக பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இல்லையெனில் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்றும் போராட்டக்காரர்கள் எச்சரித்தனர்.

தொடர் மழையிலும் முருக பக்தர்கள் நடத்திய இந்த உணர்வுப்பூர்வமான போராட்டம் புதுச்சேரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சங்கராபுரம் பகுதியில் புற காவல் நிலையம் அமைக்க வேண்டும் என புரட்சி பாரதம் கட்சியின் கள்ளக்குறிச்சி மேற்கு மாவட்ட செயலாளர் ஓவியர் பாபு கோரிக்கை



சங்கராபுரம் டிச 18

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் புற காவல் நிலையம் அமைக்க கோரி பலமுறை புரட்சி பாரதம் கட்சி சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

சங்கராபுரம் காவல்துறை பொதுமக்கள் நலன் கருதி பேருந்து நிலையத்திற்கு சரியான காவலர்களை நியமித்து குற்றங்களை தடுக்க தவறிய விட்டது. அதே சமயம் கள்ளக்குறிச்சி மாவட்ட கண்காணிப்பாளர் உடனடியாக சங்கராபுரத்தில் புற காவல் நிலையம் அமைத்து தொடர்ந்து நடைபெறுகின்ற குற்றங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க புரட்சி பாரதம் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

சங்கராபுரம் சுற்று வட்டார பகுதிகளில் பகல் நேரம் மற்றும் இரவு நேரங்களில் தொடர்ந்து அதிக அளவில் குற்ற செயல்கள் நடைபெறுகிறது அதை தடுக்க இரவு காவலர்களை நியமிக்க வேண்டும் அதே போல சங்கராபுரம் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் போக்குவரத்து காவலர்களை நியமிக்க கேட்டுக் கொள்கிறோம்.

சங்கராபுரம் காவல் நிலையத்தில் போதுமான காவலர்கள் இல்லாததால் குற்றங்கள் அதிக அளவில் நடைபெறுகிறது. சங்கராபுரம் காவல் நிலையத்தில் காவலர்கள் இல்லாத சூழ்நிலை உருவாகிறது. காவல் நிலையத்தில் போதுமான காவலர்களை நிரப்பி சங்கராபுரம் சுற்று வட்டார பகுதிகளில் நடைபெறுகின்ற குற்ற செயல்கள் தடுக்க நடவடிக்கை எடுக்க புரட்சி பாரதம் கட்சி மேற்கு மாவட்ட செயலாளர் ஓவியர் பாபு கோரிக்கை.

# ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் அறிக்கை பசுமாடு வளர்க்கும் உரிமையாளர்களுக்கு அறிவுறை!



17.12.2025 அன்று சுமார் 1.00 மணி அளவில் அரியாங்குப்பம் காமராஜர் திருமண மண்டபம் அருகில் உள்ள பெரிய சைடு வாய்க்கால் பசுமாடு அதிகாலையில் தவறி விழுந்து உள்ளது அதனை இப்பொழுது பார்த்தவுடன் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது உடனே அங்கு வந்த ஊழியர்கள் அரியாங்குப்பம் காவல்துறை ஆய்வாளர் இடம் தொடர்பு கொண்டு தீயணைப்பு துறை வரவழைத்து வெகு நேரமாக உயிருக்கு போராடிய அந்த பசு மாட்டை உயிருடன் மீட்டனர் விரைவாகவும் அந்த பசு மாட்டுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது இது பெரு உதவியாக இருந்த இளநிலை பொறியாளர் சுரேஷ், செழியன் அவர்களுக்கும் காவல்துறை தீயணைப்பு துறை அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் பாராட்டுகளையும் நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றேன் மேலும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு ஏழை மக்கள் கட்சி சார்பாக எனது பணிவான வேண்டுகோள் சாலையில் சுற்றித் திரியும் மாடுகளின் உரிமையாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் பசு மாடு வளர்ப்பவர்கள் தங்களது பாதுகாப்பான இடத்தில் அதை வளர்க்க தெரிவிக்க வேண்டும் மேலும் மீறினால் அவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் நன்றி! ஏழை மக்கள் கட்சி நிறுவனர் பூக்கடை கமலக்கண்ணன் .

# திண்டுக்கல்லில் பெண்களுக்கு வங்கிக்கடன் வழங்க சிறப்பு முகாம் இன்று நடக்கிறது

திண்டுக்கல்,டிச.18

திண்டுக்கல் மாவட்டத்தில் இன்று (வியாழக்கிழமை) மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பிற்பகல் 2 மணியளவில் . பெண்கள் வருகைபுரிந்து மகளிர் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தில் தொழில் தொடங்குவதற்கு வங்கிக் கடன் கோரி விண்ணப்பிக்கும் பொருட்டு, சிறப்பு முகாம் மாவட்ட கலெக்டர் சரவணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்கள் மற்றும் வங்கி மேலாளர்கள் கலந்து கடன் கொண்டு விண்ணப்பங்களை உடனுக்குடன் பரிசீலித்து கடன் ஒப்புதல் ஆணை

வழங்க உள்ளதால் வியாபாரம், சேவை மற்றும் அட்டை, உற்பத்தி தொழில் தொடங்க ஆர்வமுள்ள பெண்கள் தங்களது ஆதார் அட்டை, குடும்ப சாதிசான்றிதழ், கல்வி தகுதிக்கான சான்றிதழ், வங்கி கணக்கு புத்தகம், பான் அட்டை, தொடங்க உள்ள தொழிலுக்கான விலைப்பட்டியல் ஆகியவற்றின் அசல் மற்றும் இரட்டை நகல்களுடன் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, திண்டுக்கல் மாவட்டத்தில் வசிக்கும் பெண்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் சரவணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள நெடுமானூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயின்று வரும் இரண்டாம் வகுப்பு குழந்தை பள்ளியில் விளையாடும் போது பாம்பு கடித்ததால் பெற்றோர்கள் அதிர்ச்சி.

சங்கராபுரம் டிச 18

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள நெடுமானூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அதே கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி மகள் நவிதா இரண்டாம் வகுப்பு படித்து வரும் நிலையில் பள்ளியில் விளையாடிக்கொண்டிருக்கும் போது பாம்பு கடித்ததாக கூறப்படுகிறது,

இதனை அடுத்து அங்கிருந்த சக ஆசிரியர்கள் குழந்தையை உடனடியாக சோழம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்தனர் அங்கு குழந்தைக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக, 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்று கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தை நவிதாக்கு தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், பெற்றோர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்துள்ளது.

# கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறையையொட்டி நீலகிரி வரும் சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பு!!

நீலகிரி: டிச. 18–

கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறையை ஒட்டி உதகைக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ‘நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்ட சுற்றுலா தலங்களுக்கு மட்டுமே செல்ல வேண்டும். வனப்பகுதிகளுக்குள் வீடியோ எடுக்கவும், டிரோன் பறக்கவிடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். hidden spots என்ற குறி சமூக வலைத்தளங்களில் வீடியோ பதிவிடக்கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

அதைபோல் hidden spots பாதுகாப்பு இல்லாத வனப்பகுதி என்று சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை என்றும் நீலகிரி மாவட்ட வனத்துறை கட்டுப்பாடுகளை விதித்தனர். குறிப்பாக கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு நீலகிரி வரும் சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது என வனத்துறை தெரிவித்துள்ளது.

# கும்மிடிப்பூண்டி அருகே போதைப்பொருள் கடத்தி வந்ததாக ஐந்து பேர் கைது

திருவள்ளூர் டிச 18 :

பிறமாநிலங்களில்இருந்து போதைப்பொருட்களின் கடத்தலை கட்டுப்படுத்த திருவள்ளூர் மாவட்ட காவல்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் முயற்சிகளின் தொடர்ச்சியாக, மாநில எல்லைகளைக் கடந்து சட்டவிரோதமாக போதைப்பொருள் கடத்தும் கும்பல்களை ஒழிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் மாநிலங்களுக்கு இடையேயான செயற்கை போதைப்பொருட்கள் நடமாட்டம் குறித்த ரகசிய தகவலின் அடிப்படையில், தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி பெங்களூரில் இருந்து தமிழ்நாட்டிற்கு மெத்தாம்பெட்டமைன், எம்டிஎம்ஏ, கோகைன் போன்ற போதைப்பொருட்களைக் கடத்தி விநியோகம் செய்வதாக ரகசிய தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கும்மிடிப்பூண்டி அருகே வாகன சோதனையில் ஐந்து பேரை கைது செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் சந்தோஷ் (24), நடராஜ் (25), கிஷோத் குமார் (24), தவசி (24) மற்றும் சுந்தரபாண்டியன் (24) என தெரியவந்தது. இதனையடுத்து கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்தில் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தல் வழக்கில் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் சுமார் 24 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், சுமார் 373 கிராம் மெத்தாம்பெட்டமைன், 48 எம்டிஎம்ஏ மாத்திரைகள் (30 கிராம்) மற்றும் 2.8 கிராம் கோகைன் மீட்கப்பட்டுள்ளது என மாவட்ட காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் போதைப்பொருட்களைக் கடத்தும் கும்பல்கள் மற்றும் அவர்களுக்கு உதவுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எஸ்பி விவேகானந்தா சுக்லா தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு ஹஜ் இல்லத்திற்கு, ரூ.39 கோடி அடிக்கல் நாட்டு விழா!!



கோவை டிச:18

சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு அருகிலுள்ள நங்கநல்லூரில், ஒரு ஏக்கர் அரசு நிலத்தில் ரூ.39.20 கோடி செலவில் அமையவிருக்கும் தமிழ்நாடு ஹஜ் இல்லத்திற்கு, (டிசம்பர் 16, 2025) மாண்புமிகு தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

நாளொன்றுக்கு சுமார் 400 ஹஜ் புனித பயணிகள் தங்கி, ஓய்வெடுத்து, பயணத்தைத் தொடங்கும் வசதியுடன் கூடிய இந்த ஹஜ் இல்லம், விமான நிலையத்துக்கு மிக அருகில் அமைவதால், ஹஜ் பயணம் மேற்கொள்ளும் முஸ்லிம்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும். ஹஜ் பயணிகளின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் இந்த மகத்தான திட்டத்திற்கு வழியமைத்த முதல்வர் அவர்களுக்கு, பல் சமய நல்லுறவு இயக்கம் சார்பில் மனமார்ந்த நன்றியையும், உள்ளம் கனிந்த பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

என். ஹாஜி யி. முகமது ரஃபி தலைவர், பல் சமய நல்லுறவு இயக்கம் தமிழ்நாடு. தமிழ்நாடு சிறுபான்மை ஆணையம்உறுப்பினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.



கள்ளக்குறிச்சி டிச 18

தனியார் துறை நிறுவனங்களும் தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் சிறிய அளவிலான ”வேலைவாய்ப்பு முகாம்“ கள்ளக்குறிச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பாக ஒவ்வொரு மாதத்தின் மூன்றாம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. வருகின்ற 19.12.2025 வெள்ளிக்கிழமை அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்

தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறும். இவ்வேலைவாய்ப்பு முகாமில் தமிழகத்தை சார்ந்த வங்கி, நிதி, வாகன உற்பத்தி, காப்பீடு சில்லரை விற்பனை துறையை சார்ந்த முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கான தேவையான பணியிடங்களை நிரப்ப உள்ளனர். இது ஒரு இலவசப்பணியே ஆகும்.

இம்முகாமிற்கு பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை, ஐடிஐ, டிப்ளமோ, பி.இ / பி.டெக், முடித்த ஆண், பெண் ஆகியோர் www. tnpriva tejobs.tn.gov.in இணையதளத்தில் CANDIDATE LOGIN வழியாக தங்களை பதிவு செய்து கொண்டு கலந்து கொள்ளலாம். இதன் மூலம் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கு அவர்களது வேலைவாய்ப்பு பதிவு ரத்து செய்யப்படமாட்டாது.

எனவே தகுதியும் விருப்பும் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும், தனியார்த் துறை நிறுவனங்களும் வருகின்ற 19.12.2025 வெள்ளிக் கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை கள்ளக்குறிச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறும் இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

# இ பைலிங் முறையை கைவிட கோரி உயர் நீதிமன்றத்திற்கு தபால் நிலையம் மூலம் கடிதம் அனுப்பி வழக்கறிஞர்கள் போராட்டம் திருச்சி நீதிமன்றத்தில் இருந்து அனுப்பினர்

திருச்சி டிச. 18

நீதிமன்றங்களில் இ பைலிங் முறை கட்டாயமாக்கப்படுவதை கண்டித்தும், அதற்கான கட்டமைப்புகளை செய்து கொடுத்த பின்பு நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியும்,குடும்ப நீதிமன்றங்களில் வழக்காடிகளே நேரடியாக இ பைலிங் செய்ய வேண்டும் என்பதை ரத்து செய்யக்கோரியும் ,இ பைலிங் செய்வதற்கு ஏராளமான சேவை மையங்களை தொடங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் வழக்கறிஞர்கள் கடந்த இரண்டாம் தேதி முதல் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக இன்று மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உயர்நீதிமன்ற பதிவாளர்,பார் கவுன்சில் சேர்மன் மற்றும் உயர் நீதிமன்ற இ கமிட்டி பதிவாளர் இன்று தபால் மூலம் கடிதம் அனுப்பும் போராட்டம் இன்று நடைபெற்றது.போராட்டத்தில் திருச்சிராப்பள்ளி சங்கத் தலைவர் எஸ்.பி.கணேசன், திருச்சிராப்பள்ளி வழக்கறிஞர்கள் சங்கத்தின் செயலாளர் சி.முத்துமாரி ஆகியோர் தலைமை தாங்கினார்.

பார் கவுன்சில் உறுப்பினர் ராஜேந்திரகுமார், துணை தலைவர் வடிவேல்சாமி,இணைச் செயலாளர் விக்னேஷ், பொருளாளர் சதீஷ்குமார்,முன்னாள் துணைத் தலைவர் மதியழகன்,வழக்கறிஞர் ஆரோக்கியசாமி மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# செஞ்சியில் அதிக ஒளி எழுப்பும் ஏர் ஹாரன் பயன்படுத்தும் பேருந்துகளில் ரூ.10000 அபராதம் விதித்த செஞ்சி மோட்டார் வாகன ஆய்வாளர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி நான்கு முனை சந்திப்பில் தனியார் மற்றும் அரசு பேருந்துகள் மற்றும் லாரிகளில் அதிக ஒளி எழுப்பும் ஹாரன்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். இதுகுறித்து தகவல் அறிந்த செஞ்சி மோட்டார் வாகன ஆய்வாளர் கிருஷ்ணன் அதிக ஒளி எழுப்பக்கூடிய பேருந்துகள் மற்றும் லாரிகளை மடக்கி சோதனை செய்து ரூபாய் பத்தாயிரம் அபராதம் விதித்தார்.இந்த ஆய்வின்போது போக்குவரத்து காவல்துறையினர் உட்பட பலர் இருந்தனர்.

# விழிப்புணர்வு பேரணியில் அமைச்சர்.




தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சேலம் மின் பகிர்மான வட்டத்தில் மின்சார சிக்கன வார விழா(14.1220.12)வை முன்னிட்டு மக்களிடம் மின்சார சிக்கனம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பேரணியை துவக்கி வைத்த அமைச்சர் ராஜேந்திரன்.நிகழ்வில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் பிருந்தா தேவி,துறை சார்ந்த அதிகாரிகள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ் ஆட்சிமொழிச் சட்ட வாரவிழாவில் பள்ளி மாணவி தமிழ் ஆட்சிமொழி குறித்த விழிப்புணர்வு கிராமியப்பாடல் பாடியதை பாராட்டி சான்றிதழ் மற்றும் புத்தகம் வழங்கினார் .உடன் துறை இயக்குனர் ஜோதி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி மற்றும் புள்ளம்பாடி ஒன்றியங்களைச் சேர்ந்த 109 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்வழங்கிடும் வகையில் நீர் அன்பில்அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆடுசித்தலைவர் சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக பொறியாளர் பரிமளாதேவி, உதவி நிர்வாக பொறியாளர் தர்மராஜன், உதவி பொறியாளர் சுசித்ரா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்னாங்கூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு உரையரங்கம்...!




வந்தவாசி, டிச 18:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தெருநாய்களிடம் இருந்து எவ்வாறு தற்காப்பது, நேர மேலாண்மை, பாலின சமத்துவ விழிப்புணர்வு உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு உரையரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் சுமதி, மோகனவள்ளி, பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் துறை தலைவர் எழில் வசந்தன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக, வழூர் ஆரம்ப சுகாதார நிலையம் டாக்டர் அருண்குமார், வீரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் வேலாயுதம் ஆகியோர் பங்கேற்று, தெரு நாய்களிடம் எவ்வாறு நாம் பாதுகாத்து கொள்வது, நாய் கடியால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், உடல், மனம் சார்ந்த பல்வேறு விழிப்புணர்வு தகவல்களையும் வழங்கினர். உடல் ஆரோக்கியமும் சரி விகித உணவு பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டது. இறுதியில் வணிகவியல் துறை தலைவர் பேராசிரியர் மணி முருகன் நன்றி கூறினார்.

# கோரிக்கைகளை வலியுறுத்தி அய்யாக்கண்ணு தலைமையில் திருச்சியில் விவசாயிகள் திடீர் போராட்டம்

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேச்சுவார்த்தை



திருச்சி. டிச. 18–

திருச்சியில் விவசாய சங்கத் தலைவர் பி.ஆர் பாண்டியன் கைதுசெய்யப்பட்டதை கண்டித்தும், அவரை விடுதலை செய்யக்கோரியும், தமிழகம் முழுவதும் விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை தள்ளுபடி செய்யகோரியும், விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை வழங்ககோரியும் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாய சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் இன்று கரூர் பைபாஸ் சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அய்யாக்கண்ணு நிருபர்களிடம் கூறும்போது, டெல்லியில் சென்று லாபகரமான விலை கேட்டு போராடச் சென்ற தன்னுடைய காலை மத்திய பிரதேச போலீசாரை கொண்டு உடைத்துள்ளதாகவும், காவல்துறையைக் கொண்டு விவசாயிகளை மிரட்டும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது. அதற்கும் நியாயம் கேட்டுத்தான் போராடுகிறோம்.

அமைச்சர்கள் யாராவது வந்து விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற உறுதிமொழி அளித்தால் மட்டுமே போராட்டத்தை கை விடுவோம். இல்லாவிட்டால் சாகும்வரை போராட்டத்தை தொடர்வோம். விவசாயிகள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை வாபஸ் பெறாவிட்டால் அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களை ஒருங்கிணைத்து சென்னையில் சென்று போராடுவோம் என தெரிவித்தார்.

இந்த நிலையில் தகவல் அறிந்த தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் சென்று போராட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது அமைச்சர் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தார். அதைத்தொடர்ந்து அய்யாக்கண்ணு உள்ளிட்ட விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

விவசாயிகளின் அரை நிர்வாண போராட்டம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரசு தொடக்கப் பள்ளிகள் தோறும் திறன்மிகு வகுப்பறைகள்.



சேலம்: டிச. 18–

தமிழகத்தில் அரசு தொடக்கப் பள்ளிகளில் இணையம் வசதியுடன்கூடிய ஸ்மார்ட் டி.வி.கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வண்ண மேஜை, நாற்காலிகள் வழங்கி திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

தமிழகத்தில் சுமார் 24,300 தொடக்கப் பள்ளிகள், 7,000 நடுநிலைப் பள்ளிகள், 3,100 உயர்நிலைப் பள்ளிகள், 3,100 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் 52 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

கிராமப்புறங்களில் இயங்கும் அரசு தொடக்கப் பள்ளிகளில் ம் மாணவ, மாணவிகளுக்கு நகர்ப்புற தனியார் பள்ளிகளுக்கு இணையாக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்பிக்கும் நோக்கில் கடந்த கல்வியாண்டில் பெரும்பாலான பள்ளிகளுக்கு இணைய வசதியுடன்கூடிய ஸ்மார்ட் டி.வி எனக் குறிப்பிடப்படும் திறன்மிகு தொலைக்காட்சி திரைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து தற்போது குழந்தைகள் விரும்பும் வகையில் வண்ணமயமான தலா 5 மேஜைகள், 20 நாற்காலிகள் கொண்ட தொகுப்பு தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம், வாழப்பாடி அண்ணாநகர் தொடக்கப் பள்ளி, பெத்தநாயக்கன் பாளையம், அயோத்தியாப் பட்டணம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்பறையில் வைக்கப்பட்டுள்ள வண்ண மேஜை, நாற்காலிகள் மாணவர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

மேலும், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற மாணவர்கள் திறன்மிகு வகுப்பறையை ஆர்வமுடன் ரசித்து உற்சாக மடைந்தனர். இந்த வகுப்பறை மாணவர்கள் தொய்வின்றி கல்வி கற்பதற்கான ஆர்வத்தையும் இந்த வகுப்பறை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கூறியதாவது:

பெரும்பாலான அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு கடந்த ஆண்டு இணைய வசதியுடன் கூடிய ஸ்மாட் டி.வி வழங்கப்பட்டுள்ளது. நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே ஹைடெக் லேப் என்ற பெயரில் நவீன வகுப்பறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கப் பள்ளிகளில் படித்துவரும் குழந்தைகளின் மனநிலையை அறிந்து அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் ஸ்மார்ட் டி.வி பொருத்தப்பட்டுள்ள திறன்மிகு வகுப்பறைகளில் அமர்ந்து கற்பதற்கு ஏற்ப தற்போது பல வண்ணங்களில் மேஜை, நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்களின் கற்கும் ஆர்வமும், அடைவுத்தேர்வில் தேர்ச்சி விகிதமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

# பாவங்கள் நீங்கும் நம்பிக்கையில் பாம்பன் கடலில் துணிகளை வீசும் ஐயப்ப பக்தர்கள்: அச்சத்தில் மீனவர்கள்

பாம்பன் பாலத்தில்இருந்துபக்தர்கள் பழைய துணிகளை கடலில் வீசுவதால் மீன்களும் மற்றும் மீனவர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. சபரிமலை சீசன் என்பதால் ஐயப்ப பகதர்கள் ராமேஸ்வரத்துக்கு வருகை தந்து சமிதரிசனம் செய்துவிட்டு சொந்த ஊர்களுக்கு திரும்பி செல்கின்றனர். அப்படி செல்லும் வழியில் பாம்பன் பாலத்தில் நின்று பழைய துணிகளை கடலில் தூக்கி வீசுவதை காணமுடிகிறது . இதனால் கடலில் அங்கங்கே துணிகள் மிதக்கின்றன. பழைய துணிகளை கடலில் வீசுவதால் அரியவகை கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது.

விசை படகு மற்றும் நாட்டுபடகுகளில் துணிகள் சிக்கி படகுகள் சேதம் அடையும் சூழலும் உருவாகிறது என மீனவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். பாவங்கள் நீங்கும் என்று நினைத்து பாம்பன் கடலில் பக்தர்கள் பழைய துணிகளை வீசி செல்வதை தவிர்க்க வேண்டும் எனவும் உள்ளூர் மக்கள் வலியுறுத்திக்கின்றனர். கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் மீனவர்களின் நலன் கருதி ஐயப்ப பக்தர்கள் வேட்டி மற்றும் துண்டுகளை கடலில் வீசக்கூடாது என மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு பலகை வைத்து கண்காணிக்க வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

# 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் ரயிலில் அடிபட்டு இறப்பு கொலையா? தற்கொலையா? என ரயில் இருப்பு பாதை போலீசார் விசாரணை:





திருச்சியில் பொன்மலை ரயில் நிலையத்திற்கும் திருவெறும்பூர் ரயில் நிலையத்திற்கும் இடையே ரயில் இருப்பு பாதையில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஆண் ஒருவர் ரயிலில் அடிபட்டு இறப்புதகவல் அறிந்து வந்த ரயில் இருப்புப் பாதை சிறப்பு உதவி ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் இறந்த நபரின் உடலை கைப்பற்றி திருச்சி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும் ரயில் இருப்புப் பாதை போலீசார் வழக்கு பதிவு செய்து கொலையா? தற்கொலையா ? என போலீசார் விசாரணை.

# கருத்து கேட்பு கூட்டம்



அரியலூர். டிச. 18–

அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கம் தலைவா செங்கமுத்து பேசுகையில். மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் செட்டிநாடு சுண்ணாம்புக்கல் சுரங்கம் விரிவாக்கத்தில் பேசியது செட்டிநாடு சிமெண்ட் ஆலையின் இரண்டு சுண்ணாம்புக்கல் சுரங்க விரிவாக்கம் சுமார் 56 ஏக்கர் அளவில் வெட்டப்படுகின்ற இந்த சுரங்கத்தின் ஆயுட்காலம் 10 வருடம் இந்த சுரங்கத்தில் வெடி வைப்பது துளையிடுவது இல்லை இந்த இரண்டு சுரங்கத்திலும் தல 10 நேரடி வேலைவாய்ப்புகளும் 50 மறைமுக வேலை நபர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது இந்த சுரங்கத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கும் விவசாயி பிள்ளைகளுக்கும் வேலை வழங்க வேண்டும் சுண்ணாம்புக்கல் ஏற்றி செல்லும் டிப்பர் தாயார் பாய் போட்டு மூட வேண்டும் அளவுக்கு அதிக பாரம் ஏற்றி செல்லக்கூடாது குறைந்த அளவு வேகத்தில் தான் செல்லும் என உத்தரவாதம் வழங்கியுள்ளனர் அதை போல் சுண்ணாம்புக்கல் எடுத்துச் செல்ல வேண்டும் சுண்ணாம்பு கற்கள் ஏற்றி செல்லும் டிப்பர் நெடுஞ் சாலைத்துறை சாலைக்கு வரும் பொழுது டயர்களை தண்ணீரால் கழுவி எடுத்துச் செல்ல வேண்டும் ஆனால் இப்போது மழைக் காலங்களில் தண்ணீர் போட்டு கழுவாமல் சேரோட நெடுஞ் சாலைத் துறையில் சாலையில் வருகின்றன அதனால் அதிக சேர் சாலையில் விழுகின்றன டூவீலர் கார் மற்றும் நடந்து செல்லும் மனிதர்கள் மேல் அந்த சேர் அதிக அளவில் சாலையில் உள்ளதால் யாரும் சாலையில் போக முடியாத ஒரு நிலை உள்ளது ஆகையால் மழைக்காலங்களில் சேர முழுமையாக கழுவி விட்ட தான் நெடுஞ் சாலை துறையில் டிப்பர் லாரிகள் வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் மழைக்காலங்களில் டிப்பர் லாரிகள் சீரோடு வந்தால் அவர் கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த நேரத்தில் டிப்பர் லாரிகள் வருவதற்கு தடை விதிக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என்று முடிவு செய்தார்.

# திருப்பரங்குன்றம் விவகாரத்தில் எந்த உள்நோக்கத்துடனும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை: தலைமைச் செயலாளர்

மதுரை: 'டிச.18–

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் எந்த உள்நோக்கத்துடனும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை.

ஏற்கெனவே உள்ள உத்தரவுகளின் அடிப்படையில்தான் 144 தடை உத்தரவு பிறப்பித்தோம்' என திருப்பரங்குன்றம் தீப வழக்கில் ஐகோர்ட் மதுரை கிளையில் காணொலியில் ஆஜராகி தலைமைச் செயலாளர் முருகானந்தம் விளக்கமளித்துள்ளார்.

# ஓபிஎஸ்க்கு ஒருபோதும் அதிமுகவில் இனி இடமில்லை. பாஜகவுக்கு 30 தொகுதிகள்.

## அதிமுக ஆதரவாளர் சேலம் மணிகண்டன் பேட்டி

சேலம். டிச. 18–

அதிமுக ஆதரவாளர் சேலம் மணிகண்டன் சமீபத்தில் அளித்த பேட்டியில் எடப்பாடி பழனிசாமி தற்போது அதிமுகவின் அசைக்க முடியாத தலைவராக உருவெடுத் துள்ளதாக வும், 2026 தேர்தல் அவருக்கு ஒரு முக்கிய ‘அக்னிப் பரீட்சை’ என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிமுக தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே விருப்பமனு வாங்குவது கட்சியின் வழக்கமான வேகம் என்றும், எடப்பாடி பழனிசாமி தனது தலைமையின் கீழ் தொண்டர்களை ஒருமுகப்படுத்தி வைத்துள்ளார் என்றும் அவர் வாதிடுகிறார்.

ஓ.பன்னீர்செல்வம் இனி ஒருபோதும் அதிமுகவில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார் என்றும், அண்ணாமலை ஏற்படுத்திய குழப்பங்களை தீர்க்கவே அமித்ஷா தற்போது நேரடியாக களமிறங்கியுள்ளதாகவும் அவர் கூறுகிறார். அண்ணாமலை அதிமுகவை வலுவிழக்க செய்ய முயன்றது பாஜக தலைமைக்கு புரிந்துவிட்டது என்பது அவர் கருத்து.

ஜனவரி மாத இறுதியில் பிரதமர் மோடி தலைமையில் ஒரு பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும், அதில் எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சர் வேட்பாளராக பிரதமர் அறிவிப்பார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாஜகவிற்குத் தமிழகத்தில் சுமார் 8% வாக்கு வங்கி இருப்பதை ஒப்புக்கொள்ளும் அவர், தொகுதி பங்கீட்டில் அதிமுகசுமார் 30இடங்கள் வரை பாஜகவிற்கு வழங்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பயனடைந்த பொதுமக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றியை தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக உங்கள் தொகுதியில் முதலமைச்சர், இல்லம் தேடி கல்வி திட்டம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காக்கும் நம்மைக் காக்கும் 48, புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கள ஆய்வில் முதலமைச்சர் மற்றும் மக்களுடன் முதல்வர், கலைஞரின் கனவு இல்லம் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்கள் கடைக்கோடியில் வாழக்கூடிய நபர்களுக்கும் சென்றடையும் வண்ணம் செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி விரைந்து மக்களை சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பயனடைந்த பொதுமக்கள் தெரிவித்ததாவது:

திருமதி.மாரியாயி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

என்னுடைய பெயர் மாரியாயி, நான் முத்தம்பட்டி, நெசவாளர் காலனியில் வசித்து வருகிறேன். எனக்கு அருகில் உள்ளவர்கள் இத்திட்டத்தை



பற்றி சொன்னார்கள். நான் சுயமாக செயல்பட உதவியாக உள்ளது. நான் இந்த வாகனத்தின் மூலம் வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க பெரும் உதவியாக உள்ளது. இதன் மூலம் யாருக்காவும் காத்திருக்கும் நிலை இல்லை. நான் என் தேவைகளை நானே நிறைவு செய்து கொள்கிறேன். இந்த பயனுள்ள வாகனத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்;.

செல்வி.அசுவதி. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



என்னுடைய பெயர் அசுவதி, நான் பொன் மலையில் வசித்து வரு கிறேன். எனக்கு இந்த நகரும் நாற்காலி மிகவும் பயனுள்ள தாக உள்ளது. இதன் மூலம் தேவையான இடங்களுக்கு செல்லவும், படிக்கவும், உணவு உண்ணவும் பயனுள்ளதாக உள்ளது. இதுபோன்ற அருமையான நகரும் நாற்காலியை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்;.

செல்வன்.நவீன்குமார், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



என்னுடைய பெயர் நவீன் குமார், நான் வரகனேரியில் வசித்து வருகிறேன். எனக்கு நகரும் நாற்காலி இல்லாமல் மிகவும் சிரமமாக இருந்தது. அப்போழுது அருகில் எனது உறவினர்கள் இந்த நகரும் நாற்காலி பற்றிய விவரத்தை பற்றி கூறினார்கள். நான் விண்ணப்பித்தேன். எனக்கு அரசு இந்த நகரும் நாற்காலியை வழங்கியது. எனக்கு இது பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது. நான் விரும்பிய இடங்களுக்கு செல்லவும், எனது பொருட்களை வைக்கவும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த நகரும் நாற்காலியை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்;.

திரு.ராமநாதன், திருச்சிராப்பள்ளி மாவட்டம்



என்னுடைய பெயர் ராமநாதன். நான் மருங்காபுரி, கலிங்கபட்டி, மறவபட்டியில் வசித்து வருகிறேன். நான் தினக்கூலியாக வேலைசெய்து வருகிறேன். எனது வயது முதிர்வு காரணமாக நான் மற்ற இடங்களுக்கு செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. நான் இந்த வாகனத்திற்காக விண்ணப்பித் திருந்தேன். இந்த வண்டியை எனக்கு வழங்கினார்கள். இதன் மூலம் நான் எனது வேலைகளை சுலபமாக செய்ய முடிகிறது. தேவையான இடங்களுக்கு சுலபமாகவும் விரைவாகவும் சென்று வர முடிகின்றது. எனக்கு இந்த பயனுள்ள வாகனத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்;.

தொகுப்பு:
**உதவி இயக்குநர்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.

# பாரதிய ஜனதா கட்சி சார்பில் செஞ்சி சட்டமன்ற தொகுதி மாநாடு மற்றும் பயிலரங்கம்



செஞ்சி, டிச.18

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி பாஜக. சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து பாஜக. வாக்குச்சாவடி முகவர்களுக்கான சிறப்பு பயிலரங்கம் செஞ்சி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பயிலரங்கத்திற்கு செஞ்சி சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் வி.பி.என். கோபிநாத் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் கே.ஆர்.விநாயகம், மாவட்ட பொதுச் செயலர் கே. பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்புரை யாற்றினர். மாவட்ட செயலர் சிவகாமி வரவேற்றார். பயிலரங்கம் மூன்று அமர்வுகளாக பிரிக்கப்பட்டு முதல் அமர்வில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட இணை அமைப்பாளர் அன்பழகன் எஸ் ஐ ஆர் பணிகளை அமைப்பு ரீதியாக எப்படி பயன்படுத்த வேண்டும் என விளக்கி கூறினார். இரண்டாவது அமர்வில் பேசிய ரங்கராஜன் எஸ்ஐஆர் பட்டியலில் இறந்த வர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக என கவனமுடன் பார்க்க வேண்டும், திமுகவினர் கள்ள வாக்குகளை சேர்க்க முயற்சித்து வருவதாக தெரிகிறது, இதை விழிப்புடன் இருந்து விரைவில் வெளிய இருக்கும் வாக்காளர் பட்டியலை பார்த்து அப்படி கள்ள வாக்குகள் இருந்தால் அதை நீக்க முயற்சி செய்ய வேண்டும் என கூறினார்.

மூன்றாது அமர்வில் பேசிய முன்னாள் எம்எல்ஏ. வி.ஏ.டி.கலிவரதன் பிரதமர் மோடியின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்குகளை சேகரிக்க வேண்டும் என கூறினார்

நிகழ்ச்சியில் மாவட்ட துணை தலைவர்கள் என்.ஏ.ஏழுமலை, ராதே, கோகுல். விஜயலட்சுமி, மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சரவணன், ஸ்ரீரங் கன், தங்க.ராமு, மேகலா, ஞானமணி, ஏழுமலை, அசோக்குமார், சரவணன், பிரசண்ணா உள்ளிட்ட வாக்குச் சாவடி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ராமதாஸ் தலைமையில் பாமக மாநில நிர்வாக குழு நிர்வாகிகளுடன் ஆலோசனை..!

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தனது மகன் அன்புமணி தனி கட்சி ஆரம்பித்து கொள்ளட்டும். பாமக கட்சி பெயரையோ அல்லது எனது பெயரையோ பயன்படுத்தக் கூடாது. எனது இன்ஷியலை வேண்டுமானால் பயன்படுத்திக் கொள்ளலாம் என தொடர்ந்து பேசி வருகிறார். இந்த நிலையில் இந்த மாதம் இறுதியில் சேலம் தலைவாசலில் பாமக சிறப்பு பொதுக்குழு கூட்டம் டாக்டர் ராமதாஸ் தலைமையில் நடைபெறுகிறது.

இதற்கு முன்னோட்டமாக விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் இன்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் ராமதாஸ் உட்பட 22 பேர் கலந்து கொண்ட நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது.இந்த ஆலோசனை கூட்டத்தில் பாமககவுரவ தலைவர் ஜி.கே. மணி, பாமக செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ராமதாசின் மூத்த மகள் ஸ்ரீ காந்தி, அருள் எம்.எல்.ஏ,பொதுச் செயலாளர் முரளி சங்கர், பொருளாளர் சையத் மன்சூர் அலி,முன்னாள் எம்.பி. துரை, தலைமை நிலைய செயலாளர் அன்பழகன்,மாநில நிர்வாகி பரந்தாமன் உள்ளிட்ட 22 நிர்வாகிகள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அன்புமணி தொடர்ந்து பாமகபெயரையும், டாக்டர் ராமதாஸ் பெயரை பயன்படுத்தி வருவதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவும், கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்தும், வருகிற தேர்தலில் தேசிய கட்சியுடன் கூட்டணி அமைக்கலாமா? அல்லது மாநில கட்சியுடன் கூட்டணி அமைக்கலாமா? அல்லது வேறு ஏதேனும் புதிய கட்சி யுடன் கூட்டணி அமைக்கலாமா? என டாக்டர் ராமதாஸ் ஆலோசனை நடத்தியதாகதகவல் வெளியாகியுள்ளது.

# திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தீக்காயம் ஏற்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.2 லட்சத்திற்கான காசோலைகள் : அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்



திருவள்ளூர் டிச 18 : பேரம்பாக்கம் பகுதியில் குப்பை கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில், தீக்காயம் ஏற்பட்டு திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்கள் சத்யா மற்றும் அஞ்சு ஆகியோரை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் தீப்பம்பட்டி வே.ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் கூறி தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.2 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் ஜே.என். சாலை, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் பள்ளி கல்வித்துறையின் பொது நூலக இயக்ககம் சார்பில் சிறப்பு நூலகத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், மாவட்ட நூலக அலுவலர் சரஸ்வதி, அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி முதல்வர் ஜே.ரேவதி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) சரண்யா, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர் ஹரிஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சௌந்தரி(வ.ஊ), உதவி பொறியாளர் அருள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை இலயோலா கல்லூரி சமூகப் பணித்துறை முதலாம் ஆண்டு மாணவர்கள் சார்பில் கிராம முகாம்



செஞ்சி டிச 18

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா பாண்டியன் குளம் கிராமத்தில் உள்ள கேர் கவுன்சில் பள்ளியில் சென்னை இலயோலா கல்லூரியில் சமூக பணித்துறை பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்கள் சார்பில் கிராம முகாம் நிறைவு விழா நடைபெற்றது . முன்னதாக இந்த முகமானது டிசம்பர் 8 முதல் 17 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் மாணவர்கள் கிராமப்புற வாழ்வியல், விவசாயம் பற்றி பாண்டியன் குளம் சுற்றியுள்ள கிராம பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டு கேட்டறிந்தனர். மற்றும் கிராமப்புறங்களுக்கு உள்ள பொதுமக்களிடம் கல்வியின் முக்கியத்துவம் பெண்ணுரிமை பாதுகாப்பு கலை போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தொடர்ந்து 17 ஆம் தேதி முகாம் நிறைவு விழா நடைபெற்றது இவ்விழாவில் மேல் சேவூர் ஊராட்சி மன்ற தலைவர் ராஜகோபால் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக அகல் மையத்தின் இயக்குனர் இராயப்பன் சே.ச கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பள்ளியின் தலைமை ஆசிரியர் சகோதரி பெல்லா முன்னிலை வகித்தார் நிகழ்ச்சியில் சமூகம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் நாட்டுப்புற கலைகள் பலவற்றை நடித்தும் நடனமாடியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒருங்கிணைப் பாளர்களாக பேராசிரியர்கள் ஜோசப் எரிக் டன்ஸ்டன் , லோச்சனா பிரியா மாணவர் ஒருங்கிணைப் பாளர்களாக ரூபஸ் அவந்திகா இலயோலா கல்லூரி மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பொங்கல் தொகுப்புடன் ஐந்தாயிரம் ரூபாய் போனஸ் வழங்க கோரி கட்டுமான தொழிலாளர்கள் திருச்சியில் போராட்டம்

## தொழிலாளர் நலவாரிய அலுவலகம் முன்பு திரண்டதால் பரபரப்பு

திருச்சி , டிச. 18

தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்த கட்டுமான தொழிலாளர்கள் அனைவருக்கும் பொங்கல் தொகுப்புடன் போனஸ் ரூ 5000 வழங்க வேண்டும். தொழிலாளருக்கு எதிரான நான்கு சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வேண்டும். பெண் தொழிலாளிக்கு 55 வயதில் பென்ஷன் வழங்க வேண்டும். பென்ஷனை ரூ.3000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும். இயற்கை மரணம், விபத்து, திருமணம், கல்வி போன்ற உதவி தொகைகளை காலம் தாழ்த்தாமல் உடனே வழங்க வேண்டும். கட்டுமான தொழிலாளர்கள் வீடு கட்ட விண்ணப்பித்த அனைவருக்கும் வீடு கட்ட உடனடியாக நிதி வழங்கி ஒப்புதல் வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சி புறநகர் மாவட்ட கட்டுமான தொழிலாளர் சங்கம் சார்பில் இன்று செங்குளம் காலனியில் உள்ள தொழிலாளர் நல வாரிய அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கட்டுமான சங்க புறநகர் மாவட்ட தலைவர் சிவக்குமார் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சிஐடியு புறநகர் மாவட்ட செயலாளர் சம்பத், கட்டுமான சங்க புறநகர் மாவட்ட செயலாளர் தியாகராஜன், மாவட்ட பொருளாளர் மரிய புஷ்பம், ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் பன்னீர் செல்வம், பெல் சிஐடியு சங்க பொதுச்செயலாளர் பரமசிவம் ஆகியோர் பேசினர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதேபோன்று திருச்சி மாநகர் மாவட்ட கட்டுமான தொழிலாளர் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்க மாவட்ட செயலாளர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சிஐடியு மாநகர் மாவட்ட செயலாளர் ரெங்கராஜன், மாவட்டத் தலைவர் மாறன், மாவட்ட துணைத் தலைவர் சீனிவாசன் ஆகியோர் பேசினர். இதில் நிர்வாகிகள் உலகநாதன், முருகன், வெள்ளைச்சாமி, வெங்கடேசன், சக்திவேல், வனஜா உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் கடற்கரையில் கடல் அரிப்பு

தூத்துக்குடி: டிச.18

திருச்செந்தூரில் கடல் அரிப்பு; பக்தர்கள் பாதுகாப்பாக நீராட 200 அடி நீளத்துக்கு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. கடலில் ஆழமான பகுதியில் பக்தர்கள் குளிக்க வேண்டாம் என அதிகாரிகள் அறுவுறுத்தி வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421